# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2406/03 - 2024 ඔක්තෝබර් මස 15 වැනි අඟහරුවාදා - 2024.10.15

*2406/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அமைவாக நிறுவப்பட்டுள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் 2024 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலின்போது அந்தந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களால் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவிற்கமைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிட முடியுமான செலவின எல்லைகள், போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் சுயேச்சைக் குழுக்களுடனும் கலந்துரையாடிய பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டு இதனகத்துக் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.*

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, ஒற்றோபர் 15.


1A - EPG 6905 — 254 (2024/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

01. 2024 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒவ்வொரு அரசியல் கட்சி, சுயேச்சைக்குழு மற்றும் வேட்பாளரினால் தான் போட்டியிடும் தேர்தல் மாவட்டத்தின் செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேருநரொருவர் சார்பாக தனது தேர்தல் செலவினமாக செலவிட முடியுமான அதிகபட்ச தொகை இணைப்பு – 01 இல் (i) ஆக காட்டப்பட்டுள்ளது.

02. 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவிற்கமைய பாராளுமன்றத் தேர்தலுக்கு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட வேட்பாளரொருவர் சார்பாக செலவிடக்கூடிய நிர்ணயிக்கப்பட்ட தொகை மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கு அந்த தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட எல்லாத் தேருநர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதனால் கிடைக்கப்பெறும் தொகை, ஒரு கட்சிக்கு / சுயேச்சைக்குழுவுக்கு, மற்றும் ஏற்புடைய கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரினாலும் செலவிட முடியுமான தொகை அனுமதியளிக்கப்பட்ட தொகையாகும். அது இணைப்பு 01 இல் (ii) எனக் காட்டப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க, அந்த அனுமதியளிக்கப்பட்ட தொகையில் இருந்து,

I. நூற்றுக்கு அறுபது (60%) சதவீதத்தை, ஏற்புடைய தேர்தல் மாவட்டத்திற்கு ஒரு கட்சியிலிருந்து / சுயேச்சைக் குழுவிலிருந்து தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களினால் வகுப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் தொகையை ஒவ்வொரு வேட்பாளர் சார்பிலும் (இணைப்பு 01 இல் (iii),

II. நூற்றுக்கு முப்பத்தொன்பது தசம் ஐந்து (39.5%) சதவீதத்தை, அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக்குழுவொன்றுக்கு (இணைப்பு – 01 இல் (iv)),

III. நூற்றுக்கு பூச்சியம் தசம் ஐந்து (0.5%) சதவீதத்தை, தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் எண்ணிக்கையான 29 இனால் வகுப்பதன் மூலம் கிடைக்கும் தொகை தேசியப் பட்டியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் (இணைப்பு–01 இல் (v)),

தமது தேர்தல் செலவினமாக ஏற்புடைய தேர்தல் மாவட்டத்திற்கு செலவிட முடியும். ஒவ்வொரு கட்சியும் போட்டியிடும் தேர்தல் மாவட்டங்களுக்கு அமைய அனுமதியளிக்கப்படும் தொகை நிர்ணயிக்கப்படுவதால் கட்சியொன்றுக்கு மற்றும் தேசியப் பட்டியல் வேட்பாளரொருவருக்கு செலவு செய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை போட்டியிடும் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் ஏற்புடைய அனுமதியளிக்கப்படும் தொகை என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

04. தேர்தல் பிரச்சார செலவினங்கள் அடங்கிய செலவின விபரத்திரட்டுக்கள் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 (இருபத்தொரு) நாட்களுக்குள் குறித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் ஒவ்வொரு வேட்பாளரினாலும் ஏற்புடையவாறு தயாரிக்கப்பட்டு கட்சிச் செயலாளரின் கையொப்பம், சுயேச்சைக் குழுத் தலைவரின் கையொப்பம் மற்றும் வேட்பாளரின் கையொப்பம், சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது சமாதான நீதவானினால் அத்தாட்சிப்படுத்தி ஏற்புடைய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் / மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

அவ்விபரத்திரட்டில்,

I. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளர் சார்பாக பெறப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் அத்துடன் அத்தகைய நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் பொருளாகவிருப்பின் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியும், குறித்த உதவுதொகைகள் கொடை, கடன், முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையாக அன்பளிப்புச் செய்யப்பட்டதா,

II. அத்தகைய நன்கொடைகளை, உதவுதொகைகளை அளிக்கின்ற தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுக்களின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வரி செலுத்துநர் அடையாளம் காணும் இலக்கமும் (TIN இலக்கம்) அல்லது பதிவு இலக்கமும் உள்ளக்கப்படுதல் வேண்டும்.

அவ்விபரத்திரட்டில்,

(அ) எந்த ஊடகத்தின் அல்லது வேறு வகையிலான நடவடிக்கைகள் சம்பந்தமான செலவுகள் (விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், கொடிகள், பதாகைகள், சித்திரங்கள், நிழற்படங்கள், அறிவித்தல்கள், சுவரொட்டிகள் முதலிய),

(ஆ) வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் பரப்பீடுசெய்தல்

(இ) செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், சமூக ஊடகங்கள், எண்ணிம முறையிலான விளம்பரப் பலகைகள் அல்லது வேறேதேனும் எண்ணிம முறையிலான ஊடகத்தில் அல்லது வேறு வெளிப்படுத்துகைகள்

(ஈ) வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எரிபொருள் வழங்குதல்

முதலியவற்றுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதா, மேற்கொள்ளப்படவில்லையா என்பதை உறுதிப்படுத்துகின்ற சிட்டைகள், பற்றுச்சீட்டுக்கள், இந்தச் சேவைகள் கொடுப்பனவுகள் இன்றி பெற்றுக் கொள்ளப்படுமாயின், அத்தகைய சேவையை வழங்கிய ஆளின் பெயர், முகவரி என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

இதன்போது,

(அ) தேர்தல் நடைபெறும் பிரதேசத்தினுள் வேட்பாளரின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு அத்துடன்,

(ஆ) எழுதுகருவிகள், தொலைபேசிகள் அல்லது வேறு வகையிலான தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு

மேற்கொள்ளப்பட்ட செலவு, மேற்குறித்த விபரத்திரட்டில் உள்ளடக்கப்படுதலாகாது.

05. அத்தகைய விபரத்திரட்டுக்கள் 10(பத்து) நாட்களுக்குள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வெளிப்படுத்துகைகள் கிடைத்திருப்பதையும், அவ்விபரத்திரட்டுக்களின் வெளிப்படுத்துகைகளை ஆளெவருக்கும் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய இடம் மற்றும் நேரங்களையும் குறிப்பிட்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரு தேசிய செய்தித்தாளிலேனும் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவித்தலொன்று வெளியிடப்படும்.

06. ஆளெவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவொன்றைச் செலுத்துவதன் பேரில் அவ்விபரத்திரட்டுக்களின் பிரதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். குறித்த கட்டண அளவை சொல்லப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து அறிந்து கொள்ள முடியும்.

07. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் அல்லது வேட்பாளரொருவரினால் உரிய திகதிக்கு ஏற்புடைய விபரத்திரட்டுக்கள் ஒப்படைக்கப்படாதுள்ளவிடத்து அல்லது குறித்த விபரத்திரட்டுக்கள் தவறுகளுடன்கூடியதாக இருக்கின்றவிடத்து சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றவராவதுடன், சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

08. (1) 2024 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலின் போது ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவர்,

(அ) யாதேனும் அரசாங்கத் திணைக்களமொன்றிடமிருந்து, பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றிடமிருந்து அல்லது யாதேனும் அளவான பங்குவைத்திருக்கை அரசாங்கத்தினால் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றினால் வகிக்கப்படுகின்ற 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனிகள் தொடர்பான ஏதேனும் முன்னைய எழுத்திலான சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியிடமிருந்து,

(ஆ) வெளிநாட்டு அரசாங்கமொன்றிடமிருந்து, சர்வதேச ஒழுங்கமைப்பொன்றிடமிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றிடமிருந்து

(இ) நேரடியாக அல்லது மறைமுகமாக வெளிநாட்டுப் பங்குவைத்திருக்கை நூற்றுக்கு ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட உள்ளதான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனிகளுக்கு ஏற்புடைய முழுநேர யாதேனுமோர் எழுத்திலான சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட யாதேனுமொரு கம்பனியொன்றிடமிருந்து ; அல்லது

(ஈ) ஆளடையாளத்தை வெளிக்காட்டாத ஆளெவரிடமிருந்து

அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவர் தேர்தல் ஊக்கப்படுத்தல் அல்லது அதற்கு இடமளிக்கும் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவர் அது சார்பாக பண ரீதியான அல்லது பொருள் ரீதியான வகையில், நேரடியாக அல்லது மறைமுகமாக அத்தகைய அன்பளிப்புகளை அல்லது உதவுதொகைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது பெற்றுக்கொள்ளல் கூடாது.

(2) (1) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் அத்தேர்தல் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளவாறு சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறொன்றைப் புரிகின்றவராவதுடன், சட்டமுரணானவொரு பழக்கம் என்ற தவறு தொடர்பில் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

இணைப்பு 01

| இலக்கம் | தேர்தல் மாவட்டம் | பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | ஒரு தேருநருக்கு செலவு செய்ய முடியுமான தொகை (ரூ.) (i) | மொத்த அதிகபட்ச செலவு எல்லை (ரூ.) (ii) | போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை | ஒரு வேட்பாளர் செலவு செய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரூ.) (iii) | கட்சியொன்றுக்கு/ சுயேச்சைக்குழு வொன்றுக்கு செலவு செய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரூ.) (iv) | தேசியப் பட்டியல் வேட்பாளர் ஒருவருக்கு செலவுசெய்ய முடியுமான அதிகபட்ச செலவு எல்லை (ரூ.) (V) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 1,765,351 | 114 | 201,250,014 | 21 | 5,750,000 | 79,493,756 | 34,698 |
| 2 | கம்பஹா | 1,881,129 | 110 | 206,924,190 | 22 | 5,643,387 | 81,735,055 | 35,677 |
| 3 | களுத்துறை | 1,024,244 | 108 | 110,618,352 | 14 | 4,740,787 | 43,694,249 | 19,072 |
| 4 | கண்டி | 1,191,399 | 108 | 128,671,092 | 15 | 5,146,844 | 50,825,081 | 22,185 |
| 5 | மாத்தளை | 429,991 | 107 | 46,009,037 | 8 | 3,450,678 | 18,173,570 | 7,933 |
| 6 | நுவரெலியா | 605,292 | 110 | 66,582,120 | 11 | 3,631,752 | 26,299,937 | 11,480 |
| 7 | காலி | 903,163 | 109 | 98,444,767 | 12 | 4,922,238 | 38,885,683 | 16,973 |
| 8 | மாத்தறை | 686,175 | 109 | 74,793,075 | 10 | 4,487,585 | 29,543,265 | 12,895 |
| 9 | அம்பாந்தோட்டை | 520,940 | 111 | 57,824,340 | 10 | 3,469,460 | 22,840,614 | 9,970 |
| 10 | யாழ்ப்பாணம் | 593,187 | 100 | 59,318,700 | 9 | 3,954,580 | 23,430,887 | 10,227 |
| 11 | வன்னி | 306,081 | 82 | 25,098,642 | 9 | 1,673,243 | 9,913,964 | 4,327 |
| 12 | மட்டக்களப்பு | 449,686 | 110 | 49,465,460 | 8 | 3,709,910 | 19,538,857 | 8,529 |
| 13 | திகாமடுல்ல | 555,432 | 113 | 62,763,816 | 10 | 3,765,829 | 24,791,707 | 10,821 |
| 14 | திருகோணமலை | 315,925 | 115 | 36,331,375 | 7 | 3,114,118 | 14,350,893 | 6,264 |
| 15 | குருணாகல் | 1,417,226 | 107 | 151,643,182 | 18 | 5,054,773 | 59,899,057 | 26,145 |
| 16 | புத்தளம் | 663,673 | 109 | 72,340,357 | 11 | 3,945,838 | 28,574,441 | 12,472 |
| 17 | அநுராதபுரம் | 741,862 | 110 | 81,604,820 | 12 | 4,080,241 | 32,233,904 | 14,070 |
| 18 | பொலன்னறுவை | 351,302 | 109 | 38,291,918 | 8 | 2,871,894 | 15,125,308 | 6,602 |
| 19 | பதுளை | 705,772 | 109 | 76,929,148 | 12 | 3,846,457 | 30,387,013 | 13,264 |
| 20 | மொணராகலை | 399,166 | 110 | 43,908,260 | 9 | 2,927,217 | 17,343,763 | 7,570 |
| 21 | இரத்தினபுரி | 923,736 | 110 | 101,610,960 | 14 | 4,354,755 | 40,136,329 | 17,519 |
| 22 | கேகாலை | 709,622 | 108 | 76,639,176 | 12 | 3,831,959 | 30,272,475 | 13,214 |

EOG 10 - 0143